# திருவேற்காடு நகராட்சி
## நகர்மன்ற சாதாரணக் கூட்டம்

**2020 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 31ம் நாள் வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு திருவேற்காடு நகராட்சி அலுவலகத்தில் நடைபெறும் நகர்மன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.**

**நகராட்சி அலுவலகம்,**
**திருவேற்காடு**
**நாள்: 31.07.2020**

**தனி அலுவலர் (ம) ஆணையர்,**
**திருவேற்காடு நகராட்சி.**

---

## பொருள் எண். 1

இந்நகராட்சியின் ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களின் ஜுலை 2020 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–** மன்றம் பதிவு செய்யலாம்

**நகர்மன்ற தீர்மான எண்.1194** **நாள்.31.07.2020**

**தீர்மானம் : பதியப்பட்டது.**

---

## பொருள் எண். 2

இந்நகராட்சியில் பல்வேறு இனங்களுக்கான ஜுலை 2020 மாதத்தின் செலவுச்சீட்டுகள் மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–** மன்றம் பதிவு செய்யலாம்

**நகர்மன்ற தீர்மான எண்.1195** **நாள்.31.07.2020**

**தீர்மானம் : பதியப்பட்டது.**

---

## பொருள் எண். 3

இந்நகராட்சியில் ஜுலை 2020ல் பதிவு செய்துள்ள பிறப்பு, இறப்பு, மற்றும் இறந்து பிறந்தகுழந்தைகளின் விவரம் மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–** மன்றம் பதிவு செய்யலாம்

**நகர்மன்ற தீர்மான எண்.1196** **நாள்.31.07.2020**

**தீர்மானம் : பதியப்பட்டது.**

---

## பொருள் எண்.4

இந்நகராட்சி எல்லைகுட்பட்ட பகுதிகளில் பொது நிதி 2020–21ன் கீழ் கொரோனா வைரஸ் பரவி வருவதால், பொது மக்களின் நோய் தொற்று நலன்கருதி தடுப்பு நடவடிக்கைக்காக இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள நோய் தொற்று ஏற்பட்டுள்ள வீடுகளிருந்து மக்கள் வெளியேறா வண்ணம் தொற்று பரவுவதை தடுக்கு பொருட்டு, பாதிப்படைந்த குடியிருப்புகளில் சவுக்கு மரம் மற்றும் அலுமினியம் தகடுகளை கொண்டு தடுப்பு (Barricade) அமைக்கும் பணிகள் மேற்கொள்ள அதற்கான தோராய மதிப்பீடு தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**:-

**அ)** மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**ஆ)** தற்போது கொரோன (COVID-19) வைரஸ் தொற்று நோய் காரணமாக தடுப்பு நடவடிக்கை பணிகள் மேற்கொள்ள, மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் (ம) ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணியினை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் மேற்படி மதிப்பீட்டிற்கு மதிப்பீட்டை விட 0.62 % குறைவாக அளித்த ஒப்பந்ததாரர் திரு.G.மதிவேலன் அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கி பணி தொடர்ந்தமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**இ)** மேற்படி பணிக்குண்டான செலவினத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1197** **நாள்.31.07.2020**

**தீர்மானம் : அ, ஆ & இ அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.5

இந்நகராட்சி எல்லைகுட்பட்ட பகுதிகளில் பொது நிதி 2020—21ன் கீழ் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைக்காக இந்நகராட்சி பகுதிகளில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க முக்கிய பிரதான சாலைகளிலும், சாலை சந்திப்புகளிலும் மற்றும் தெரு பகுதிகளிலும் கொரோனா தடுப்பு எச்சரிக்கைக்காக காவல் துறையினர், பொது சுகாதார பணியாளர்கள் மற்றும் மருத்துவ குழுவினர் ஆய்வு மேற்கொள்ள வசதியாக அரேபியன் வகை நிழற்குடை அமைக்கும் பணியினை மேற்கொள்ள அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.1.30 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**:-

**அ)** மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**ஆ)** தற்போது கொரோன (COVID-19) வைரஸ் தொற்று நோய் காரணமாக தடுப்பு நடவடிக்கை பணிகள் மேற்கொள்ள, மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் (ம) ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணியினை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15—ன் கீழ் மேற்படி மதிப்பீட்டிற்கு மதிப்பீட்டை விட 0.72 % குறைவாக அளித்த ஒப்பந்ததாரர் திரு.G.மதிவேலன் அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கி பணி தொடர்ந்தமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**இ)** மேற்படி பணிக்குண்டான செலவினத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1198** **நாள்.31.07.2020**

**தீர்மானம் : அ, ஆ & இ அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.6

இந்நகராட்சி எல்லைகுட்பட்ட பகுதிகளில் பொது நிதி 2020—21ன் கீழ் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைக்காக இந்நகராட்சி பகுதிகளில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க 6.50 HP திறன் கொண்ட பெட்ரோல் இன்ஜின் கொண்ட மின்மோட்டர் மற்றும் மின்மோட்டாருடன் இணைக்க தேவையான உதிரி பாகங்களை புதியதாக வாங்கி சப்ளை செய்யும் பணிக்கு அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.1.80 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**:-

**அ)** மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**ஆ)** தற்போது கொரோன (COVID-19) வைரஸ் தொற்று நோய் காரணமாக தடுப்பு நடவடிக்கை பணிகள் மேற்கொள்ள, மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் (ம) ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணியினை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15—ன் கீழ் மேற்படி மதிப்பீட்டிற்கு மதிப்பீட்டை விட 0.76 % குறைவாக அளித்த ஒப்பந்ததாரர் **M/s.குமரேசன் காண்ட்ராக்டர்** அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கி பணி தொடர்ந்தமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**இ)** மேற்படி பணிக்குண்டான செலவினத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1199** **நாள்.31.07.2020**

**தீர்மானம் : அ, ஆ & இ அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.7

இந்நகராட்சி எல்லைகுட்பட்ட பகுதிகளில் பொது நிதி 2020—21ன் கீழ் கீழ்க்கண்ட அடிப்படை வசதி பணிகளை மேற்கொள்ள 24.07.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகள் விபரங்கள் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | நூம்பல் பிரதான சாலையில் பழுதடைந்த RCC Pipe பகுதிகளை சிமெண்ட் தளம் கொண்டு சீரமைத்தல். | 1.50 | V.பார்த்திபன்<br>M.கார்த்திக் | 0.05 % மதிப்பீட்டை விட குறைவு<br>0.11 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 2. | சுந்தரசோழபுரம் பிரதான சாலைக்கு தார்தளம் அமைத்தல். | 3.40 | J.வெங்கடேசன்<br>J.இளங்கோ | 0.004 % மதிப்பீட்டை விட குறைவு<br>2.01 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 3. | கீழ்அயனம்பாக்கம் மாந்தோப்பு சாலைக்கு தார்தளம் அமைத்தல். | 9.90 | N. செல்வராஜ்<br>V.பார்த்திபன் | 0.02 % மதிப்பீட்டை விட குறைவு<br>2.81 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 4. | கீழ்அயனம்பாக்கம் மாந்தோப்பு குறுக்கு சாலைக்கு தார்தளம் அமைத்தல். | 5.00 | N. செல்வராஜ்<br>V.பார்த்திபன் | 0.02 % மதிப்பீட்டை விட குறைவு<br>2.80 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 5. | கோலடி லட்சுமி நகர் பிரதான சாலைக்கு தார்தளம் அமைத்தல். | 8.10 | J.வெங்கடேசன்<br>J.இளங்கோ | 0.01 % மதிப்பீட்டை விட குறைவு<br>1.99 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 6. | புவனா தோட்ட சாலைக்கு தார்தளம் அமைத்தல். | 8.10 | R.கதிர்வேல்<br>U.R.சுப்பிரமணியம் | மதிப்பீட்டு தொகை<br>1.44 % மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு :–**

**அ)** மேற்படி பணிகளில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்க மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1200** **நாள்.31.07.2020**

**தீர்மானம் : அ, ஆ அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.8

திருவேற்காடு நகராட்சியில் கொரோனா வைரஸ் பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. மேலும், நகராட்சிகள் நிர்வாக ஆணையர் மற்றும் கொரோனா வைரஸ் தடுப்பு கண்காணிப்பு அலுவலர், திருவள்ளூர் மாவட்டம் அவர்களின் பல்வேறு கொரோனா ஆய்வு கூட்ட அறுவுரைகளின்படி கொரோனா வைரஸ் தொற்று நோயினால் பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் பொது சுகாதாரப் பணிகள் பாதுகாப்பான முறையில் கையாளவும் அறிவுறுத்தப்பட்டதை தொடர்ந்து, நெடுஞ்சாலைகள் மற்றும் Hotspot களில் தேங்கியுள்ள குப்பைகளை அகற்றுவதற்கு தனியார் JCB வாகனம் கொண்டு மாத வாடகையின் அடிப்படையில் பணி அமர்த்தி கொள்ள அறிவுறுத்தப்பட்டதாலும், நகராட்சி பகுதியில் கொரோனா வைரஸ் தாக்கம் அதிகம் உள்ளதால் தூய்மைப் பணிகளில் தொய்வு ஏற்படாமல் இருக்கவும், தனியார் மூலம் JCB வாகனம் வாடகைக்கு அமர்த்தி பிரிவு 15–ன் கீழ் பணிகள் மேற்கொள்ள இந்நகராட்சி ஆணையர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, பணியின் அவசரம் அவசியம் கருதி பணிகள் மேற்கொள்ளவும் இதற்கென ஆகும் தோராய செலவீனம் ரூ.9.50 இலட்சத்திற்கு வருவாய் நிதியில் செலவீனம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:—**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1201** **நாள்.31.07.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.9

திருவேற்காடு நகராட்சியில் உள்ள 18 வார்டுகளிலும் கொரோனா வைரஸ் **(Covid-19)** நோய் தொற்று அதிகமாக பரவுவதாலும், இத்தொற்று நோயினை கட்டுப்படுத்திட பல்வேறு நடிவடிக்கைகள் எடுக்கப்படுகிறது. மேலும், நாடு முழுவதும் இத்தொற்று நோயின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால், நகராட்சி பகுதியிலும் அனைத்து வார்டுகளிலும் இத்தொற்று நோய் பரவளாக அதிகமாகி வருகிறது. மேலும், இந்நோய் தொற்றினை கட்டுப்படுத்திட அரசு வழிக்காட்டுதலின்படி பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதோடு கபசுர குடிநீர் வழங்கப்பட்டு வரப்படுகிறது. தற்போது நகராட்சியில் போதிய அளவு இருப்பு இல்லாததால் இந்நகராட்சி துப்புரவு ஆய்வாளரால் 01.07.2020 தேதிய குறிப்புரையில் 1500 கிலோ கபசுர குடிநீர் மருந்து வாங்கி வழங்கிட கோரியுள்ளார். மேலும், மாவட்ட ஆட்சி தலைவர் திருவள்ளூர் மாவட்டம், அவர்களின் செயல்முறை உத்திரவு **ந.க.எண்.939/2020/M7, நாள்.18.07.2020.** உத்திரவுகளின்படி முறையே 1000 கிலோ கபசுர குடிநீர் **சித்தா புட்ஸ் டெக்** நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்து நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளஅறிவுறுத்தியுள்ளபடியால் மேற்படி நிறுவனத்திடமிருந்து 1000 கிலோ கொள்முதல் செய்து கொள்ளவும் இதற்கென ஆகும் தோராய செலவீனம் ரூ.8.50 இலட்சத்திற்கு வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள்வைக்கப்படுகிறது. **ந.க.எண்.2495/2020/எச்1**

**அலுவலக குறிப்பு:—**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1202** **நாள்.31.07.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.10

இந்நகராட்சியில் கொரோனா வைரஸ் தொற்றினை கட்டுப்படுத்திட **ECO Clean 50 Plus** கொள்முதல் செய்ய விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் ஒப்புநோக்கு பட்டியல் ஆணையர் அவர்களின் தகவலுக்கும் மற்றும் முடிவிற்கும்.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | கொள்முதல் | தொகை |
|---|---|---|---|
| 1 | Sri Shakthi Agency,<br>No.44/3, Ganapathy Nagar Main Road,<br>Ganapathy Nagar, Erode -638011. | 1 லிட்டர் | 3010/— |
| 2 | Pyrramid Processing Mills,<br>No.013/1, G, Vettukattu Valasu,<br>Nasiyanoor Road, Erode-638011. | 1 லிட்டர் | 3860/— |
| 3 | S.R. Traders,<br>No.57,Madhava Kadu,<br>Thirunagar Colony,Erode-638003. | 1 லிட்டர் | 4110/— |

மேற்படி பட்டியலின்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளியினை வழங்கிய Sri Shakthi Agency நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்கவும் மற்றும் பணி உத்திரவு வழங்கவும் ஆணையர் அவர்களின் அனுமதிக்காக.

**அலுவலக குறிப்பு:—**

அ) மன்றம் அனுமதிக்கலாம் .

**நகர்மன்ற தீர்மான எண்.1203** **நாள்.31.07.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.11

திருவேற்காடு நகராட்சியில் உள்ள 18 வார்டுகளிலும் கொரோனா வைரஸ் (Covid-19) நோய் தொற்று அதிகமாக பரவுவதாலும், இத்தொற்று நோயினை கட்டுப்படுத்திட பல்வேறு

நடிவடிக்கைகள் எடுக்கப்படுகிறது. மேலும், நாடு முழுவதும் இத்தொற்று நோயின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால், நகராட்சி பகுதியிலும் அனைத்து வார்டுகளிலும் இத்தொற்று நோய் பரவளாக அதிகமாகி வருகிறது. மேலும், இந்நோய் தொற்றினை கட்டுப்படுத்திட அரசு வழிக்காட்டுதலின்படி பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதோடு கபசுர குடிநீர் வழங்கப்பட்டு வரப்படுகிறது. தற்போது நகராட்சியில் போதிய அளவு இருப்பு இல்லாததால் இந்நகராட்சி துப்புரவு ஆய்வாளரால் 01.07.2020 தேதிய குறிப்புரையில் 1500 கிலோ கபசுர குடிநீர் மருந்து வாங்கி வழங்கிட கோரியுள்ளார். மேலும், மாவட்ட ஆட்சித் தலைவர் திருவள்ளூர் மாவட்டம், அவர்களின் செயல்முறை உத்திரவு **ந.க.எண்.7936/2020/I1, நாள்.03.07.2020.** உத்திரவுகளின்படி முறையே 500 கிலோ கபசுர குடிநீர் **சித்தா புட்ஸ் டெக்** நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்து நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள அறிவுறுத்தியுள்ளபடியால் மேற்படி நிறுவனத்திடமிருந்து 500 கிலோ கொள்முதல் செய்து கொள்ளவும் பின்னர் மாவட்ட ஆட்சியரால் ஒதுக்கீடு செய்யப்படும் கபசுரகுடிநீர் மருந்துகளை வாங்கிடவும் இதற்கென ஆகும் செலவீனம் வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.
**ந.க.எண்.2495/2020/எச்1**

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1204** **நாள்.31.07.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.12

திருவேற்காடு நகராட்சியில் பொது சுகாதாரம் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படுகிறது. இந்நகராட்சியில் உள்ள 18 வார்டுகளிலும் கொரோனா வைரஸ் (Covid 19) தொற்றுநோய் பரவாமல் தடுக்க நகராட்சி பகுதி முழுவதும் **லைசால்** என்னும் கிருமி நாசினி இருபக்கமும் தெளிக்க நகராட்சி நிர்வாக ஆணையர், மற்றும் கொரோனா வைரஸ் தடுப்பு கண்காணிப்பு அலுவலர், திருவள்ளூர் மாவட்டம், மாவட்ட ஆட்சி தலைவர் திருவள்ளூர் மாவட்டம் மற்றும் துணை இயக்குனர், பொது சுகாதாரம் திருவள்ளூர், ஆகியோரின் அறிவுரைகளின்படி பொது சுகாதாரப் பணிகள் மேற்கொள்ள தற்போது போதிய அளவு இருப்பு இல்லாததால் லைசால் 2000 லிட்டர் கொள்முதல் செய்திட தற்போது, மத்திய, மாநில அரசுகளின் 144 தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்ட நிலையில் புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை தொடர காலதாமதமாகும் என்பதாலும், கொரோனா வைரஸ் தொற்று நோய் அதிகமாக பரவும் காலமாக உள்ளதாலும், பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியத்தை கருதியும், விலைப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள நகராட்சி ஆணையர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, **லைசால்** கிருமி நாசினி **2,000 லிட்டர்** கொள்முதல் செய்யவும், இதற்கென ஆகும் தோராய செலவீனம் வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்வதையும் மன்றம் பதிவு செய்யலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1205** **நாள்.31.07.2020**

**தீர்மானம் : பதியப்பட்டது.**

---

## பொருள் எண்.13

திருவேற்காடு நகராட்சியில் பொது சுகாதாரம் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படுகிறது. இந்நகராட்சியில் உள்ள 18 வார்டுகளிலும் கொரோனா வைரஸ் (Covid 19) தொற்றுநோய் பரவாமல் தடுக்க நகராட்சி பகுதி முழுவதும் கிருமி நாசினி இருபக்கமும் தெளிக்க நகராட்சி நிர்வாக ஆணையர், மற்றும் கொரோனா வைரஸ் தடுப்பு கண்காணிப்பு அலுவலர், திருவள்ளூர் மாவட்டம் மற்றும் நகராட்சி மண்டல நிர்வாக இயக்குனர் செங்கற்பட்டு மண்டலம், மற்றும் துணை இயக்குனர், பொது சுகாதாரம் திருவள்ளூர், ஆகியோரின் அறிவுரைகளின்படி சுகாதாரப் பணிகள் மேற்கொள்ளவும் , நகராட்சியில் போதிய அளவு கிருமி நாசினிகள் இருப்பு வைத்திருக்க அறிவுறுத்தப்பட்டதால் **ECO Clean 50 Plus** கிருமி நாசினி கொள்முதல் செய்திட தற்போது, மத்திய, மாநில அரசுகளின் 144 தடை

உத்திரவு பிறப்பிக்கப்பட்ட நிலையில் புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை தொடர காலதாமதமாகும் என்பதாலும், கொரோனா வைரஸ் தொற்று நோய் அதிமகமாக பரவும் காலமாக உள்ளதாலும், பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியத்தை கருதியும், விலைப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள நகராட்சி ஆணையர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, **ECO Clean 50 Plus** கிருமி நாசினி **300 லிட்டர்** கொள்முதல் செய்யவும், இதற்கென ஆகும் தோராய செலவீனம் ரூ.7.50 இலட்சம் வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**நகர்மன்ற தீர்மான எண்.1206** **நாள்.31.07.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## <u>பொருள் எண்.14</u>

திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட 18 வார்டுகளிலும் தினசரி பொது சுகாதாரம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. மேலும், நகராட்சி பகுதியில் கொரோனா நோய் தொற்றினால் பாதிக்கப்பட்ட வீடுகளில் சேகரமாகும் திடக்கழிவுகள் பிற வீடுகளில் சேகரம் செய்யப்படும் திடக்கழிவுகளுடன் கலந்து விடாமல் பாதுகாப்பான முறையில் கையாளவும் நோய் தொற்று உடைய வீடுகளில் இருந்து பெறப்படும் திடக்கழிவுகள் மற்றும் மருத்துவ கழிவுகள் முறைப்படி பாதுகாப்பான முறையில் கையாளவும், நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் ந.க.எண். 5437/J2/2020/ 14 நாள்.05.04.2020 வழிகாட்டுதலின்படி மருத்துவ கழிவுகளை அழிக்கவும் **தமிழ்நாடு வேஸ்ட் மேனேஜ்மெண்ட் லிமிடெட்** நிறுவனத்தின் மூலம் அகற்றிட இவ்வலுவலக ந.க.எண்.1646/2020/எச்1 நாள்.17.04.2020ன்படி உத்திரவு வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, மேற்படி நிறுவனத்தின் மூலம் 01.05.2020 முதல் 31.10.2020 வரைஆறு மாதங்களுக்கு நகராட்சி பகுதியில் கொரோனா நோயினால் பாதிக்கப்பட்ட வீடுகளில் திடக்கழிவு கள் சேகரம் செய்த வகையில் பயன்பாட்டு கட்டணம் மாதம் ஒன்றுக்கு ரூ.20,000/– வீதம் ஆறு மாதங்களுக்கு ரூ.1,20,000/– **தமிழ்நாடு வேஸ்ட் மேனேஜ்மெண்ட் லிமிடெட்** நிறுவனத்திற்கு செலுத்திடவும் இச்செலவீனம் வருவாய் நிதியில் இருந்து வழங்கிடவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1207** **நாள்.31.07.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

**தனி அலுவலர் (ம) ஆணையர்,**
**திருவேற்காடு நகராட்சி.**